மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, கேள்வி கோவை மாநகரைப்பற்றி மட்டும் இருந்ததால் அதற்கு மட்டும் பதில் சொன்னேன். நியாயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்றாலும் விவரம் கையில் இருப்பதால் பதில் சொல்கிறேன். சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகியவை அந்த 5 நகரங்கள். சென்னை மாநகருக்கு 219 கோடி ரூபாய், கோவை மாநகருக்கு 53 கோடி ரூபாய், மதுரை மாநகருக்கு 61 கோடி ரூபாய், திருச்சிக்கு 55 கோடி ரூபாய், சேலத்திற்கு 40 கோடி ரூபாய் ஆக மொத்தம் 428 கோடி ரூபாய்.

ஆற்றோர குடிசைப் பகுதிகளை வெள்ள அபாயத்திலிருந்து மாற்று இடங்களில் குடியமர்த்தல்.

58—(*வினா எண். 7622) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ள அபாயத்திலிருந்து ஆற்றோரப் பகுதிகளான சூர்யா நகர், சத்யா நகர், ஜோதியம்மாள் நகர், கோட்டூர்புரம் 'தீ' பிடிக்காத வீடுகள் போன்ற குடிசைப் பகுதிகளை உலக வங்கித் திட்டத்தின்கீழ் மாற்று இடத்தில் குடியமர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அறநிலையத் துறை, பொதுப்பணித் துறை, கல்வித்துறை முதலிய துறைகளுக்குச் சொந்தமான காலியான இடத்தை கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட துறைகளின் ஒப்புதல் பெற்று, நிலத்தை தன்வசம் பெறுவதற்கான நடவடிக்கை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் பயன்படும் குடும்பங்கள் எத்தனை? இந்தத் திட்டத்திற்கு செலவிடப்படவிருக்கிற தொகை எவ்வளவு என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் அன்னை சத்தியா நகர், சூரியா நகர், ஜோதியம்மாள் நகர், சித்திரா நகர், கோட்டூர்புரம், மல்லிப்பூ நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 2,043 குடும்பங்கள் பயன் பெறும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 1,03,20,000 ரூபாய்.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பணிகளை முடிக்க தேவையான நிலங்களைக் கையகப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு கோவில் நிலம், குதிரைப் பந்தய நிறுவனத்திற்குச் சொந்தமான நிலம், காவல் துறையைச் சேர்ந்த நிலம், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த நிலம் போன்ற பல்வேறு துறைகளுக்கு அல்லது நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை அரசு கையகப்படுத்தி, அதற்குப் பின்னால் பணியைத் தொடங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கால நிர்ணயத்தை இப்போது உறுதியாகச் சுட்டிக்காட்ட முடியாது. இருப்பினும் வேகமாக நிலத்தைக் கையகப்படுத்தி, பணிகளை முடிக்க அரசு முயற்சி செய்யும்.

சேலம் மாவட்டம் இடைப்பாடியில் வீட்டு வசதி வாரிய வீடுகள்.

59—(*வினா எண். 8271) திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(அ) இடைப்பாடி கிராமத்தில் தற்பொழுது நில ஆர்ஜிதம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி முடிந்தபின் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்கள் தீட்டப்படும்.

திரு. ச. கோவிந்தசாமி : தலைவரவர்களே, அங்கு நீண்ட நாட்களாக வீட்டு வசதித் துறை வீடு கட்டும் பணியைத் தொடங்காமல் காலதாமதம் செய்கிறது. இந்தப் பணியை எப்போது தொடங்குவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS